

திருச்சியில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு கழக முதன்மை செயலாளர் கே.என். நேரு அவர்கள் தலைமையில் அரசு பொது மருத்துவமனை அருகில் உள்ள அவரது சிலைக்கு தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செய்தார்கள். நிகழ்ச்சியில் மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், மாவட்டத் துணைச் செயலாளர் முத்துச்செல்வம், விஜய், ஜெயராஜ், கருணாநிதி, பொருளாளர் துரைராஜ் கமால் முஸ்தபா பவுல்ராஜ், கலைச்செல்வி, வழக்கறிஞர் மணிவண்ண பாரதி, ராமதாஸ், கார்த்திக் , பந்தல் ராமு, தஸ்தா பாய் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

# மாணவர் அணி - மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அறிவிப்பு!



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி மற்றும் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வருகிற (26.07.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணியளவில், அச்சரப்பாக்கம் SMJ மகாலில் நடைபெற உள்ளது.

எனவே, இக்கூட்டத்தில் மாணவர் அணி, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தகவல் தொழில்நுட்ப அணி சட்டமன்ற தொகுதி, ஒன்றிய, பகுதி, பேரூர், ஒருங்கிணைப்பாளர்கள், துணை ஒருங்கிணைப்பாளர் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**க.சுந்தர்**
செயலாளர்
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

### சுற்றுலாத்துறை மூலம் தமிழ்நாட்டில்

# வேலை வாய்ப்பை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!



புதுடெல்லி, ஜூலை 23-

சுற்றுலாத்துறை மூலம் தமிழ்நாட்டில் வேலை வாய்ப்பை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி உறுப்பினர் சி. என்.அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பாக அவரது கேள்விகள் வருமாறு:-

(அ) கடந்த மூன்று ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும், மத்திய சுற்றுலாத் திட்டங்களின் கீழ் மேம்படுத்துவதற்காக தமிழ்நாட்டில் ஏதேனும் புதிய சுற்றுலாத் தலங்களை அரசாங்கம் அங்கீகரித்துள்ளதா அல்லது அடையாளம் கண்டுள்ளதா;

(ஆ) அவ்வாறாயின், அத்தகைய இடங்களின் விவரங்கள், மாவட்ட வாரியாக அவற்றின் தேர்வுக்காகப் பின்பற்றப்பட்ட அளவுகோல்கள், மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு, வழித்தட வசதிகள், விளக்க மையங்கள், டிஜிட்டல் வசதிகள் மற்றும் இறுதிக்கட்ட இணைப்பு ஆகியவற்றிற்காக அனுமதிக்கப்பட்டுவிடுவிக்கப்பட்ட நிதிகள்;

(இ) சூழல் சுற்றுலா, கடலோர, பாரம்பரிய, கிராமப்புற, நல்வாழ்வு மற்றும் ஆன்மீக சுற்றுலா உள்ளிட்ட, தமிழ்நாட்டில் உருவாகி வரும் சுற்றுலாச் சுற்றுப் பாதைகளை மற்ற மத்திய திட்டங்களுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் மேம்படுத்த அரசு முன்மொழிகிறதா;

(ஈ) எதிர்கால மத்திய சுற்றுலா முன்னெடுப்புகளின் கீழ் சேர்ப்பதற்காக, தமிழ்நாட்டில் குறிப்பிடத்தக்க சுற்றுலா ஆற்றல் கொண்ட வேறு ஏதேனும் சுற்றுலாத் தலங்களை அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளதா, அவ்வாறாயின் அதன் விவரங்கள்; மற்றும்

(இ) தமிழ்நாட்டில் சுற்றுலா உள்கட்டமைப்பு மேம்பாட்டின் மூலம் நிலையான சுற்றுலாவை ஊக்குவிக்கவும், பார்வையாளர் அனுபவத்தை மேம்படுத்தவும் மற்றும் வேலை வாய்ப்பை உருவாக்கவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார். அதற்கு ஒன்றிய சுற்றுலாத் துறை இணை அமைச்சர் விளக்கமாக பதிலளித்துள்ளார்.

### வேலூர் மாவட்ட விவசாயிகளுக்கான

# சூரியசக்தி குளிர்பதன கிடங்குகளை விரைந்து உருவாக்கிடுக!

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஜூலை 23-

வேலூர் மாவட்ட விவசாயிகளுக்கான சூரிய சக்தி மற்றும் குளிர்பதனக் கிடங்குகள் குறித்து ஒன்றிய அரசிடம் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் விளக்கம் கோரினார்.

வேலூர் மாவட்டத்தில் காய்கறிகள், பழங்கள், மலர்கள் உள்ளிட்ட விரைவில் கெட்டுப்போகும் விளைபொருட்களை பயிரிடும் விவசாயிகள், அறுவடைக்குப் பிறகு போதிய குளிர்பதன வசதிகள் கொண்ட அரசு கிடங்குகள் இல்லாததால் பெரும் இழப்பை சந்தித்து வருகின்றனர். இதனால் விளைபொருட்களை குறைந்த விலைக்கு விற்க வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டு, விவசாயிகளின் வருமானம் பாதிக்கப்படுகிறது.

இந்த நிலையில், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர், மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சரிடம் பின்வரும் முக்கிய கேள்விகளை எழுப்பியுள்ளார்:

1. வேலூர் மாவட்டத்தில் காய்கறி, பழம், மலர் உள்ளிட்ட விரைவில் கெட்டுப்போகும் விளைபொருட்களை பாதுகாக்க, சூரிய சக்தியில் இயங்கும் குளிர்பதனக் கிடங்குகள், தற்காலிகமான கிடங்குகள் மற்றும் விளைபொருட்களின் நகர்விற்கு ஏற்ப தொடர்ச்சியான குளிர்பதனுட்டும் (Cold Chain) வசதிகளை உருவாக்க மத்திய அரசு இதுவரை என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது? இனி என்ன திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன?

2. ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்கம் (MIDH), வேளாண் உள்கட்டமைப்பு நிதி (AIF) மற்றும் பிற மத்திய அரசுத் திட்டங்களின் கீழ், வேலூர் மாவட்டத்திலும் தமிழ்நாட்டிலும் இதுவரை எத்தனை சூரிய சக்தி குளிர்பதனக் கிடங்குகள் அனுமதிக்கப்பட்டுள்ளன? அவற்றின் சேமிப்புத் திறன் என்ன? தற்போது அவை செயல்பாட்டில் உள்ளனவா?

3. விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPO), கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வேளாண் துறையில் செயல்படும் ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், பரவலாக்கப்பட்ட சூரிய சக்தி குளிர்பதன வசதிகளை அமைத்து பயன்படுத்த மத்திய அரசு என்ன ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது?

4. 2020-21 முதல் 2025-26 வரை ஒவ்வொரு ஆண்டும் இந்தத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி, விடுவிக்கப்பட்ட நிதி மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி எவ்வளவு?

5. இந்தத் திட்டங்கள் மூலம் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகள் எந்த அளவுக்கு குறைந்துள்ளன? விளைபொருட்களின் சேமிப்பு காலம் எவ்வளவு அதிகரித்துள்ளது? விவசாயிகளின் வருமானத்தில் என்ன முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது? என்பது குறித்த விவரங்களையும் மத்திய அரசு வெளியிடுமா?

வேலூர் மாவட்ட விவசாயிகளின் நீண்டகால கோரிக்கையாக உள்ள சூரிய சக்தி குளிர்பதனக் கிடங்குகள் மற்றும் தொடர்ச்சியான குளிர்பதனுட்டும் (Cold Chain) வசதிகளை விரிவுபடுத்த மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே இந்தக் கேள்விகளின் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகள் குறைந்து, விவசாயிகள் தங்களது விளைபொருட்களுக்கு உரிய விலை பெற்று, அவர்களின் வருமானம் உயர வழிவகுக்கும்.

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

### காவிரி டெல்டா பகுதியில் — உள்நாட்டு மீன் பிடிக்கும் தொழில்

# நீர்வரத்து குறைவினால், நசிந்து வருவது ஒன்றிய அரசுக்கு தெரியுமா?

## மக்களவையில் தஞ்சை ச.முரசொலி கேள்வி!



புதுடெல்லி, ஜூலை.23-

காவிரி டெல்டா பகுதியில் உள்நாட்டு மீன் பிடிக்கும் தொழில், நீர்வரத்து குறைவினால், நசிந்து வருவது ஒன்றிய அரசுக்கு தெரியுமா? அதை தடுக்க ஒன்றிய அரசு என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது என்று தஞ்சாவூர் பாராளுமன்ற உறுப்பினர் ச. முரசொலி மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

பிரதம மந்திரி மஸ்ய சம்பதா யோஜனா திட்டத்தின் கீழ் எத்தனை மீனவர் குடும்பங்கள் தமிழ் நாட்டில், குறிப்பாக தஞ்சாவூரில் பதிவு செய்யப்பட்டுள்ளன, அவர்களுக்கு என்ன உதவிகள் செய்யப்பட்டுள்ளன என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்கு பதில் அளித்துள்ள ஒன்றிய மீன்வளம், கால்நடை மற்றும் பால்வளத்துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங், 1480 உள்நாட்டு மீன் விவசாயிகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் ரூ 196.30 லட்சம் PMMSY திட்டத்தின் மூலம் 2021-22 மற்றும் 2023-24 ஆண்டுகளில் உதவி வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2024-25 மற்றும் 2025-26 ல் 9 லட்சம் மீன் குஞ்சுகள் 459 ஹெக்டர் நிலத்தில் (மீன் குட்டைகள் ) உற்பத்தி செய்வதற்கான கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

### தருமபுரி மாவட்டத்தில்

# கிராமப் பஞ்சாயத்துகள் முழுமையான கணினி மயமாக்கப்படுமா?

## மக்களவையில் தருமபுரி ஆ.மணி கேள்வி!



புதுடெல்லி, ஜூலை 23-

நடைபெற்று வரும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங்(லாலன் சிங்) கிடம் தமிழ்நாட்டில் கிராமப் பஞ்சாயத்துகளின் மேம்பாட்டிற்காக ஒன்றிய அரசு ஒதுக்கியுள்ள நிதியின் விவரங்கள் என்ன? குறிப்பாக தருமபுரி மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் விவரங்கள் என்ன? என்று தருமபுரி நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் ஆ.மணி கேள்வி எழுப்பினார்.

மேலும் இபஞ்சாயத்து மற்றும் “டிஜிட்டல் இந்தியா” திட்டங்களின் கீழ், தருமபுரி மாவட்டத்தில் கணினிமயமாக்கப்பட்டுள்ள கிராமப் பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை என்ன? அவற்றிற்கு வழங்கப்பட்டுள்ள டிஜிட்டல் உள்கட்டமைப்பு, பிராட்பேண்ட் இணைய இணைப்பு மற்றும் மின்ஆளுமை (eGovernance) வசதிகள் குறித்த விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் உள்ள கிராமப் பஞ்சாயத்துகளின் மொத்த எண்ணிக்கை என்ன? அவற்றில் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டு, தற்போது இணையவழி பொதுச் சேவைகளை வழங்கும் கிராமப் பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை எவ்வளவு?

தருமபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளையும் 100 சதவீதம் டிஜிட்டல் மயமாக்கி, வெளிப்படையான, திறமையான மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலான கிராம நிர்வாகத்தை உருவாக்க ஒன்றிய அரசு மேற்கொள்ள உள்ள நடவடிக்கைகள் என்ன? என்று தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.

### கடலூர் இந்தியா மருத்துவ சங்கக் கட்டிடத்தில்

# மாணவ - மாணவிகள் - பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## கடலூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் வழங்கினார்!



கடலூர், ஜூலை 23-

கடலூர் கோல்டன் சிட்டி லயன்ஸ் சங்க புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா கடலூர் இந்தியா மருத்துவ சங்க கட்டிடத்தில் நடைபெற்றது.

இதற்கு முன்னாள் தலைவர் புருஷோத்தமன் தலைமை தாங்கினார். புதிய உறுப்பினராக டாக்டர் பிரவீன் ஐயப்பன், தலைவராக சேகர், செயலாளராக சுரேஷ், பொருளாளராக ரங்கநாதன் ஆகியோர் பதவியேற்றனர். புதிய நிர்வாகிகளை உதவி மாவட்ட ஆளுநர் கமல் கிஷோர் ஜெயின் பணியில் அமர்த்தினார்.

விழாவில் முன்னாள் தி.மு.க. கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் டாக்டர் பிரவீன் ஐயப்பன் ஆகியோர் கலந்து கொண்டு ஆதரவற்றோர்களுக்கு தையல் இயந்திரம், அரிசி, மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவி தொகை என 25 பயனாளிகளுக்கு ஒரு லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார்.

உதவி மாவட்ட ஆளுநர் சிவகாந்தன் புதிய உறுப்பினர்களை சங்கத்தில் இணைத்தார். விழாவில் ஜி.எல்.டி.ராஜாராமன், முன்னாள் செயலாளர் ரங்கநாதன், பொருளாளர் விஜயன், இயக்குனர்கள் ரவிச்சந்திரன், சக்திவேல், தங்கதுரை, ஜெயச்சந்திரன், சண்முகம், விஜயன், மனோகரன் ஆகியோர் வாழ்த்தி பேசினர் விழாவை சக்தி பாபு தொகுத்து வழங்கினார்.



கோவை மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகத்தில் கோவை மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழு (DISHA) கமிட்டி கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியபனவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் முனைவர் கணபதி பா.ராஜ்குமார், கோவை க.ஈஸ்வரசாமி பொள்ளாச்சி, மாநகராட்சி ஆணையாளர் கட்டா ரவி தேஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் குட்டி (எ) ஆ.சுதாகர் வால்பாறை, கே.நித்தியானந்தன் பொள்ளாச்சி, கனிமொழி சந்தோஷ் கவுண்டம்பாளையம், மு.ஜெயக்குமார் உடுமலைப்பேட்டை, மாநகராட்சி துணை மேயர் ரா.வெற்றிச்செல்வன், மாவட்ட வன அலுவலர் மற்றும் அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி, குண்டடம் மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடிக்குழு நிர்வாகிகள் கூட்டம் மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், ஒன்றிய கழக செயலாளர் சு.சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தன்சேகர், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.எஸ்.கருணாகரன், சிவக்குமார் உள்பட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், பாக முகவர்கள், வாக்குச்சாவடி குழு நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.